**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.**65/2021

பெயர் :– சின்னசாமி (P.W.–1)
த/பெ. :– செல்லக்கண்ணு
தேதி :– 10.07.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
**குறுக்கு விசாரணை:–**

விபத்தானது எந்த தேதியில், எந்த இடத்தில் நடந்தது என்றால் கடந்த 2019 ஆம் ஆண்டு 14ஆம் தேதி கடலியில் நடந்தது மாதம் நினைவில் இல்லை. விபத்தானது எனது கவனக்குறைவாலும், எனது அஜாக்கிரதையாலும் நடந்தது என்றால் சரியல்ல. தற்போது என்ன வயது என்றால் எனக்கு 64 வயது ஆகிறது. எனது ஆதார் அட்டையில் வயது 70 ஆகும். வழக்கிற்காக எனது வயதை குறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல. எனது வேலை மற்றும் வருமானம் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வயோதிகத்தின் காரணமாக எனக்கு காது மற்றும் கண் பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் இருசக்கர வாகனம் வருவது தெரியாமல் தானாக சென்று விபத்தினை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பழைய வாகனத்தை ஒன்று சேர்த்து பயன்படுத்தி வந்தேன்.

எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. எனது வாகனத்திற்கு காப்பீடும், பதிவு சான்றிதழ் இல்லை என்ற காரணத்தினால் எனது வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடும், பதிவு சான்றிதழும் இல்லாத காரணத்தினால் நான் எனது வாகனத்தை பயன்படுத்தி ஓட்டாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்து 5 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அவ்வாறு காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய நான் தான் காரணம் என்றால் சரிதான். விபத்தானது உண்மையில் நடந்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது வயது, வருமானத்திற்கு ஏற்ப நஷ்ட ஈடு கோராமல் அதிக

நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல.

மருத்துவக்குழு எனக்கு வழக்கிய ஊனச்சான்றில் என்ன, என்ன காரணத்திற்கான ஊனம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தற்போது நான் நல்ல நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. விபத்துக்கு எனது கவனக்குறைவும், அஜாக்கிரதையும் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்ய்வேண்டும் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.